# யூன் – 22 – சனி

## புனிதர்களான பவுலீனு நோவா, ஜோன் பிசர், மற்றும் தோமஸ் மூர் மறைசாட்சிகள்

**உங்களுக்கு இன்னும் அதிகமாகச் செய்ய மாட்டாரா? மத் 6:30**

---

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 12 : 1 - 10

சகோதரர் சகோதரிகளே பெருமை பாராட்டுதல் பயனற்றதே. ஆயினும் பெருமை பாராட்ட வேண்டி இருப்பதால் ஆண்டவர் அருளிய காட்சிகளையும் வெளிப்பாடுகளையும் குறித்துப் பேசப் போகிறேன்.கிறிஸ்துவின் அடியான் ஒருவனை எனக்குத் தெரியும். அவன் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை மூன்றாம் வானம் வரை எடுத்துச் செல்லப்பட்டான். அவன் உடலோடு அங்குச் சென்றானா, உடலின்றி அங்குச் சென்றானா, யானறியேன். கடவுளே அதை அறிவார்.ஆனால் அம்மனிதன் பேரின்ப வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டான் என்பது எனக்குத் தெரியும். நான் மீண்டும் சொல்கிறேன். அவன் உடலோடு அங்குச் சென்றானா அல்லது உடலின்றி அங்குச் சென்றானா யானறியேன். கடவுளே அதை அறிவார். அவன் அங்கே மனிதரால் உச்சரிக்கவும் சொல்லவும் முடியாத வார்த்தைகளைச் சொல்லக் கேட்டான்.இந்த ஆளைப் பற்றியே நான் பெருமை பாராட்டுவேன். என் வலுவின்மையே எனக்குப் பெருமை.அப்படி நான் பெருமை பாராட்ட விரும்பினாலும் அது அறிவீனமாய் இராது. நான் பேசுவது உண்மையாகவே இருக்கும். ஆயினும் என்னிடம் காண்பதையும் கேட்பதையும் விட உயர்வாக யாரும் என்னைக் கருதாதபடி நான் பெருமை பாராட்டாது விடுகிறேன்.எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள் போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்த சாத்தான் அனுப்பிய தூதனைப் போல் இருக்கிறது. நான் இறுமாப்படையாதிருக்கவே இவ்வாறு நடக்கிறது.அதை என்னிடமிருந்து நீக்கிவிடுமாறு மூன்று முறை ஆண்டவரிடம் வருந்தி வேண்டினேன்.ஆனால் அவர் என்னிடம், ”என் அருள் உனக்குப் போதும் வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்” என்றார். ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்.ஆகவே என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும் இடரிலும் இன்னலிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துணை இனியவர் என்று
சுவைத்துப் பாருங்கள்

## நற்செய்தி : மத்தேயு 6 : 24 - 34

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார். அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது.ஆகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன் உயிர்வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். உணவைவிட உயிரும் உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா?வானத்துப் பறவைகளை நோக்குங்கள் அவை விதைப்பதுமில்லை. அறுப்பதுமில்லை. களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா!கவலைப் படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்?உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டுமலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை.ஆனால் சாலமோன் கூடத் தம் மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.நம்பிக்கை குன்றியவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும் காட்டுப்புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணிசெய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் அதிகமாகச் செய்ய மாட்டாரா?ஆகவே, எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக்கவலை கொள்ளாதீர்கள்.ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர் உங்களுக்கு இவை யாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும்.ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளையக் கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்” என்றார்.

**தியானம்:** கடவுள் நம்மை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்கின்றார். தமது சாயலாக நம்மை படைத்தவர் நம்மை கைவிடவே மாட்டார். ஆனால் நாம் தான் அவர்மேல் நம்பிக்கை அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். துன்ப வேளையில் கடவுள் நம்மை கை விட்டு விட்டார் என்று புலம்புகின்றோம். ஆனால் துன்பங்களுக்கு நாம்தான் காரணம் என்பதனை உணர்வதில்லை. ஆதிப்பெற்றோருக்கு கடவுள் எந்தக் குறையும் விடவில்லை. அப்படி இருந்தும் அவர்கள் கடவுளின் கட்டளையை மீறுகின்றார்கள். பாம்பின் வடிவில் வந்த சாத்தானின் வலையில் வீழ்ந்து விடுகின்றார்கள். குறையே இல்லாமல் இருந்தவர்கள் கடவுளைப்போல் ஆகலாம் என்ற ஆசையில் தவறு செய்கின்றார்கள். இன்று எம்மில் பலரும் இவ்வாறான அதிக ஆசைகளுக்கு அடிமைகளாகி இருக்கின்றோம். ஆடம்பரமான வாழ்வு, அதிக பணம் போன்ற ஆசைகளுக்கு அடிமைகளாகியவர்கள் ஒரு புறம். சந்தோஷம் தருகின்றது என்று போதைக்கும், குடி வெறிக்கும் அடிமையாவோர் மறு புறம், பலவிதமான சுகப்படுத்த முடியாத நோய்களினால் வயது வேறுபாடின்றி பாதிக்கப் பட்டோர் ஏராளம். நற்செய்தியில் யேசு கூறுபவை எமக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கின்றது. கடவுள் நம்மை கைவிட மாட்டார். எனவே எல்லா துன்பங்களையும் அவரின் கரங்களில் ஒப்படைப்போம். அவர் நம்மை கண்ணின் கருமணிபோல் பாதுகாப்பார்.